**தலைப்பு 134 - தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்திகளில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களம் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி தொடக்கம் ஒவ்வொரு தலைப்பிற்குமுரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களம் |
| --- | --- |
| 236 | அரசகரும மொழிகள் திணைக்களம் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை பின்வரும் திகதிகளில் அவ்வமைச்சின் செயலாளருக்கும் திணைக்களத்தின் ஆணையாளருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டவையாகும்.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 134 | தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 2015 ஜுலை 15 |
| 236 | அரசகரும மொழிகள் திணைக்களம் | 2015 ஜுன் 26 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களம் என்பவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 576.25 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 479.31 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புகள் முறையே ரூபா 89.71 மில்லியன் மற்றும் ரூபா 7.23 மில்லியன் அல்லது 19 சதவீதம் மற்றும் 7 சதவீதம் என்பன ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 134 | 473.09 | 383.38 | 89.71 | 19 |
| 236 | 103.16 | 95.93 | 7.23 | 7 |
| மொத்தம் | 576.25 | 479.31 | 96.94 | 17 |
| | ====== | ====== | ===== | |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களத்தினதும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 13401 | 14.00 | 9.20 | 4.00 | 5.35 | 58.00 | 22.96 |
| 23601 | 6.50 | 5.92 | 3.50 | 4.20 | 25.00 | 17.42 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்தினது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 556,820 ஆகும். விபரம் வருமாறு.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 6000/0000/000/0015/0046/000 | 314,912 |
| அரசகரும மொழிகள் திணைக்களம் | 6000/0000/000/0015/0116/000 | 241,908 |
| மொத்தம் | | 556,820 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களம் என்பவற்றினது ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முகாமைத்துவ அறிக்கைகளில் குறிப்பிடப்படும் அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கிய அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 முதல் 4 ஆம் வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. தலைப்பு 134 - தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

03 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 600,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---

விடய இலக்கம் 13401, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 252,320 ஆகும். அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 4 ஆண்டுகளானவை. அமைச்சு அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்குத் தவறியிருந்தது.

(ஆ) மற்றுமொரு அரச நிறுவனத்திற்கு 2014 திசெம்பரில் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 111,056 கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், அமைச்சு அந்நிலுவை மீதியை அறவிடத் தவறியிருந்தது.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

அமைச்சில் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று நிறுவப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் 2014 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது. அவ்வாறே உள்ளகக் கணக்காய்வுக் கூறில் போதிய பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்படாது இரு முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதன் காரணமாக, மீளாய்வாண்டு முடிவளவில் உள்ளகக் கணக்காய்வுக் கூறினது செயற்பாடுகள் நலிவடைந்தமையால் ஒரேயொரு கணக்காய்வு ஐயவினா மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.4 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்தப் பொருட் கணிப்பை நடாத்துதல்

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளில் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த 598 பொருள் விடயங்கள் கணக்காய்வுத் தினமான 2015 ஜுலை 15 ஆந் திகதியளவிலும் கைவிர்ப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தது.

(ஆ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

முன்னாள் அமைச்சர் ஒருவர் 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் எடுத்துச் சென்றிருந்த 73 வகையிலான 166 பொருட்களுக்கு பொது 219 படிவத்திலமைந்த பற்றுச்சீட்டுக்கள் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பெறப்படாதிருந்தன.

### 3.5 இணங்காமை

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| XXX அத்தியாயத்தின் 1.4.1 ஆம் பந்தி | - | அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் 04 விரிவுரைகளை நடாத்தியமைக்காக அவருக்கு ரூபா 40,000 வழங்கப்பட்டிருந்து. எனினும், 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் |

| | | |
|---|---|---|
| | | அக்கட்டணத்தில் அரசிற்குரிய கட்டணம் அறவிடப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வில்லை. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>------------------------------------------------------------ | | |
| • நிதிப் பிரமாணம் 371(2)(இ) | 3,801,371 | சட்ட அமுலாக்கல், நியாயத்திற்கு இணங்க நடத்தல், மற்றும் இலங்கையின் சமூக ஒருங்கிணைப்பைப் பலப்படுத்துதல் தொடர்பான செயற்திட்ட நிதியிலிருந்து 2014 ஜுன் 06 முதல் 2014 ஜுலை 17 வரை வழங்கியிருந்த ரூபா 3,801,371 முற்பணமானது குறித்த வேலைகள் முடிவடைந்த உடனேயே தீர்த்து வைக்கப்படாதிருந்தன. |
| • நிதிப் பிரமாணம் 685 | 1,800,000 | 2014 ஜுலை 19 ஆந் திகதி நடைபெற்ற பட்டம் ஏற்றும் விழாவின் போது மேற்கொள்ளப்பட்ட ஊடகப் பங்களிப்பிற்குக் கூறு விலைகள் கோரப்படவில்லை. |
| (iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>-------------------------------------------------------- | | |
| 2010 ஒக்தோபர் 20 ஆந் திகதிய 12/2003 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் (I) II (ஆ) பந்தி | 12,050 | பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய 07 மொழி பெயர்ப்பாளர்களுக்கு சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 5,000 வீதப்படி 07 சந்தர்ப்பங்களில் ரூபா 35,000 வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை<br>-------------------------------------------------- | | |
| 2011 பெப்ரவரி 21 ஆந் திகதிய 449 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2(ஈ) பந்தி | - | 2013 நவம்பர் 01 ஆந் திகதிய தேசிய ஒற்றுமை மாநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட மூவருக்கு 2013 |

| | | |
|---|---|---|
| | | நவெம்பர் 18 ஆந் திகதியளவிலும் அவர்களுக்குரிய வேலைகள் வழங்கப்படவில்லை. |
| (v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>------------------------------------------------------- | | |
| • வழிகாட்டல் 8.9.1 | 2,800,000 | 2014 இன் தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக் கூடம் அமைப்பதற்குக் குறித்த நிறுவனத்துடன் அமைச்சு முறையான உடன்படிக்கை செய்து கொள்ள வில்லை. |
| | 250,000 | பட்டம் ஏற்றும் விழாவின்போது பட்டங்களை அமைப்பதற்கு தனியார் நிறுவனம் ஒன்றும் தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் தமக்கிடையே உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவில்லை. |
| • வழிகாட்டல் 5.4.4 | 720,000 | பட்டம் ஏற்றும் விழாவின் ஊடகப் பங்களிப்பிற்கு மொத்தத் தொகையில் 40 சதவீதத்திற்குந் நமமான தொகை ரூபா 720,000 2014 ஆகஸ்ட் 8 ஆந் திகதியன்று முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| • வழிகாட்டல் 5.4.8 | - | தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் ரூபா 2,800,000 ஒப்பந்தத்திற்கு ரூபா 140,000 பெறுமதியான செயலாற்றல் பிணை முறி பெறப்படவில்லை. |

## 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையில் அமைந்திருந்தன. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது புலனாகிய அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

(அ) அமைச்சின் வழிகாட்டலில் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் ''பல்வேறு அலங்காரங்களுடனான தேசிய ஒற்றுமையினது மக்கள் மாநாடு'' 2014 ஏப்ரல் 07 ஆந் திகதி நடைபெற்றது. அதன் அமைப்பாளர்களாக அமைச்சிற்குப் புறம்பான மூவர் 2013 நவம்பர் 01 முதல் ரூபா 270,000 கொடுப்பனவு வழங்கப்படும் அடிப்படையில் முழு நேர வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான தெரிவு நடைமுறைகளின்றி இவ்வுத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். இவ்வுத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 26 நாட்களுக்குப் பின்னர் அதாவது 2014 நவம்பர் 26 ஆந் திகதியன்று அவர்களின் சுயவிபரம் (Bio - data) பெறப்பட்டிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 26 ஆந் திகதிய PED/RED/01/05/2013/02 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய மாநாட்டை ஏற்பாடும் செய்யும் பணிகளுக்கு மொத்தப் படியாக ரூபா 270,000 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு முரணாக 2013 நவம்பர் 01 முதல் 2014 மார்ச் 31 வரையான 05 மாத காலத்திற்கு ரூபா 345,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) குறித்த கடிதத்தின் பிரகாரம் மாநாட்டை ஏற்பாடு செய்யும் பணியானது முறையாக முடிவடைந்து அறிக்கை வழங்கப்படுவதையடுத்து மொத்தக் கொடுப்பனவும் வழஙகப்பட வேண்டுமாயினும், அவ்வறிவுறுத்தல்களுக்கு முரணாக, மாதாந்தம் ரூபா 30,000 வீதப்படி மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 345,000 கூட்டுத்தொகையாக வழங்கப்பட்டிருந்தது.

(iv) மேலும், மேற்படி கடிதத்தின் பிரகாரம், மாநாடு முடிவடைந்ததன் பின்னர் முறைப்படி அறிக்கையொன்று குறித்த ஊழியர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதும், 2014 ஜுலை 22 ஆந் திகதியளவிலும் அமைச்சிற்கு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை.

(ஆ) தேசிய ஒற்றுமை மாநாட்டின் உயர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் தனியார் நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாநாட்டின் நிகழ்ச்சி முகாமைத்துவ நடவடிக்கைகளின்போது ''முகநூல்'' பக்கம் ஒன்றைத் தயாரித்தல், பதிவு செய்தல் மற்றும் ஆசனங்களை ஒழுங்கு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 451,600 வழங்கப்பட்டிருந்த போதும், அமைச்சின் பௌதிக மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி ஒப்பீட்டளவில் அப்பணிகளைக் குறைந்த கிரயத்தில் நடாத்தியிருக்கலாம் எனப் புலனாயிற்று.

(ii) நிகழ்ச்சி முகாமைத்துவத்தின் ஒரு பணியாகிய மாநாடு தொடர்பான புதினப் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு 2014 மார்ச் 17 ஆந் திகதியன்று ரூபா 600,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சும் மாநாடு தொடர்பான புதினப் பத்திரிகை விளம்பரங்களுக்கு ரூபா 50,000 செலவிட்டிருந்தது.

(iii) அமைச்சிற்கும் தனியார் கம்பனிக்கும் இடையே 2014 மார்ச் 07 ஆந் திகதியன்று ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு (Technical Appraisal Committee) நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு பணியினதும் முன்னேற்றம் பரிசீலிக்கப்பட்டு, நலன் குறைந்த பணிகளை முன்னேற்றுவதற்குக் கம்பனிக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதாகவிருந்தது. அவ்வாறாகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அப்பணிகளது முன்னேற்றம் பரிசீலிக்கப்பட்டதற்கான அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மாநாடு முடிவுற்று 06 வாரங்களுக்குப் பின்னர் அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது 2014 மே 28 ஆந் திகதிய அறிக்கைப் பிரகாரம் நிகழ்ச்சி முகாமைத்துவப் பணிகளில் பின்வரும் குறைபாடுகள் இருந்தமை வெளியிடப்பட்டிருந்தது.

- மாநாட்டை நடாத்துவதற்கு முன்னரும் மாநாடு நடைபெற்ற காலத்தின்போதும் துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

- 04 ஒலிபரப்பு அலை வரிசைகளின் மூலம் மாநாடு தொடர்பாக அறிவுறுத்தப்பட வேண்டியிருந்தபோதும், அதற்கு இரு அலை வரிசைகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

- 03 தொலைக்காட்சி அலை வரிசைகளுக்குப் பதிலாக இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.7 இழப்புகளும் நட்டங்களும்

-------------------------------------------

04 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வரும் ரூபா 1,243,301 கூட்டுத் தொகையுடைய நட்டங்களையும் இழப்புகளையும் 2015 ஆகஸ்ட் 15 ஆந் திகதியளவிலும் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகிய சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் வருமாறு.

(அ) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதி அமைச்சர்களின் பாவனைக்கும் பாதுகாப்பு நடவடிக்கைககளுக்குமென ஒதுக்கப்படக்கூடிய வாகனங்களது அதி கூடிய எண்ணிக்கை 03 ஆயினும், 2010 திசெம்பர் 08 ஆந் திகதியன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து பிராடோ வகை மோட்டார் வாகனமும் ஆண்டொன்றுக்கு ரூபா 375,000 , ரூபா 275,000 மற்றும் ரூபா 180,000 வீதம் (பெறுமதி சேர்வரி நீங்கலாக) வாடகை செலுத்தும் அடிப்படையில் அமைச்சு பெற்றிருந்த 3 வாகனங்களும் பிரதி அமைச்சரின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2003 மார்ச் 28 ஆந் திகதிய எம்எப்/ரீஈ/1/2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் செயலாளரது கடிதத்தின் பிரகாரம் மாண்புமிகு அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அல்லாத சகல நபர்களதும் பாவனைக்குப் பெறப்படும் வாகனங்களுக்குக் கொடுப்பனவு செய்யக்கூடிய சகல கட்டணங்களும் அடங்கிய மாதாந்த வாடகை ரூபா 40,000 ஐ அதிகரித்தலாகாது. எனினும், பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினரின் பாவனைக்கு ரூபா 91,392 மாதாந்த வாடகைப்படி ஐந்து வாகனங்கள் 2014 நவம்பர் 30 இல் உள்ளவாறு மூன்று மாதங்களுக்கு ரூபா 1,370,880 வாடகையாகத் தனியார் கம்பனி ஒன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கிகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 23 | 12 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாந்தர நிலை | 434 | 156 | 278 |
| (iv) | ஆரம்ப நிலை | 120 | 90 | 30 |
| | மொத்தம் | 581 | 260 | 321 |

**4. தலைப்பு 236 - அரசகரும மொழிகள் திணைக்களம்**

**4.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

02 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 215,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிப்புக்குள்ளாகியது.

**4.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இலக்கம் 23601, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 மார்ச் 29 ஆந் திகதி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 83,442 தொகையானது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஏப்ரல் 10 ஆந் திகதி மற்றும் 2013 மார்ச் மாதம் முதல் சேவையிலிருந்து விலகிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து முறையே ரூபா 3,700 மற்றும் ரூபா 74,116 என்பவற்றை அறவிடுவதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.3.1 உள்ளக் கணக்காய்வு**

அமைச்சினது உள்ளகக் கூறினால் 2014 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

**வருடாந்தப் பொருட் கணிப்பை நடாத்துதல்**

2014 ஆம் ஆண்டிற்குரிய பொருட் கணிப்பு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைவுகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 760 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

திணைக்களத்திற்குச் சொந்தமான கெப் வண்டி ஒன்றிற்கு 2014 ஜனவரியில் ஏற்பட்ட விபத்தினால் ரூபா 361,894 இழப்பு ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் இழப்பு தொடர்பான பூரண அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மொழிமூலப் பரீட்சைக்கு 2014 ஆம் ஆண்டில் 48,300 விண்ணப்பதாரர்கள் பங்குபற்றக்கூடும் எனக் கருதப்பட்டபோதும் அதில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை 29,360 ஆகும்.

(ஆ) தானியங்கி மொழி பெயர்ப்பு மென் அணி ஒன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நிறுவப்படாதிருந்தது,

(இ) சரியான மொழிப் பாவனை தொடர்பான ஆராய்சியொன்றை நடாத்தி செயலமர்வு ஒன்றை 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நடாத்தியிருக்கவில்லை.

(ஈ) மொழித் தேர்ச்சிப் பகுப்பாய்வு தொடர்பாகக் கணனி அடிப்படையிலான பரீட்சை நடைமுறை ஒன்றை நிறுவுதல், உள்ளகத் தொடர்பு முறைமை ஒன்றை பொருத்துதல், ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் பகுப்பாய்வு செய்தலும் திருத்தியமைத்தலும் என்பன 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நிறைவேறாதிருந்தன.

**4.7 முகாமைத்துவ நலிவுகள்**

----------------------------------------

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) முதுமாணி மற்றும் கலைமாணி பட்டக் கற்கை நெறிகளைப் பயிலுவதற்கு நிறுவனத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மொத்தக் கற்கை நெறிக் கட்டணமாகிய ரூபா 315,000 வழங்கப்பட்டதுடன், மேலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்குக் கற்கை நெறியின் அரைவாசிக் கட்டணமாக ரூபா 75,000 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது. சேவையிலிருந்து விலகுதல் அல்லது கற்கை நெறிகளை இடையே நிறுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் அத்தொகையை அறவிடுவதற்கான நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்குத் திணைக்களம் 2015 ஜனவரி 15 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்திற்கமைய நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு செய்யப்படாததுடன் திணைக்கள உத்தியோகத்தர்கள் முற்பணத்தைப் பெற்று எழுதுகருவி வகைப் பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தனர்.

**4.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 05 | 03 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 11 | 04 | - |
| (iii) | இரண்டாந்தர நிலை | 212 | 149 | 63 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 10 | 02 | - |
| (v) | ஏனையவை (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 06 | - | 06 |
| | மொத்தம் | 244 | 179 | 71 | 06 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 6 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.